அமைச்சர் அவர்கள் இந்த கை வண்டி இழுக்கிற, அடித் தட்டிலே இருக்கிற, இந்த சாதாரணத் தொழிலாளர்களுக்கும் இறந்தால் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்ற உத்தரவை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

9-30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அண்ணன் அழகர்சாமி அவர்கள் ஆண்களிலிருந்து பெண்களுக்கு வந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு உறுதி அளிக்கிறேன். (குறுக்கீடு) அவர்களுக்கும் சேர்த்து, இரண்டிற்கும் சேர்த்து அவர்களுக்கும் உதவி அளிக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் கேட்டிருப்பது இரவு நேரத்தில் வண்டி ஓட்டிச் செல்பவர்களுக்கு விபத்து ஏற்பட்டு, மாடும், வண்டியும், மனிதனும் சேர்த்து பாதிக்கப்பட்டால் அதற்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தான் — இதை இந்த அவையும், தமிழகமும் அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறது. ஆனால், மாடும், வண்டியும் பாதிக்கப்பட்டால் நிவாரணம் வேண்டுமா என்று கேட்டால், மரத்தில் ஏறி விழுந்துவிட்டால் நாங்கள் நிவாரணம் அளிப்பதற்கு அறிவித்து இருக்கிறோம் என்று கூறுவது எங்களுக்கு நிறைவு அளிக்க வில்லை. இப்படி மாடும், வண்டியும் பாதிக்கப்படும் போது, அப்படி திட்டத்தில் இல்லாவிட்டாலும் கூட, அரசு பரிசீலனை செய்து, அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு நிவாரணம் நீதிமன்றத்தில் கிடைக்கும். அரசும் அவர்களுக்கு உதவும். மரத்திலிருந்து விழுபவர்களுக்கு மட்டும் தானா, மாட்டு வண்டி இழுத்து செத்தால் அது கிடையாதா என்று கேட்டிருக்கிறார்கள். அனுதாபத்தோடு அரசு அதை கவனிக்கும். உறுப்பினர் குழப்பக் கூடாது. (சிரிப்பு).

கொளஞ்சியப்பர் மற்றும் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானங்களை இணைத்தல்

*1670 **திரு. கோ. பூவராகன் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தையும், விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானத்தையும் இணைத்து, ஒரே நிர்வாகத்தில் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1990 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாச்சலம் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானத்தையும், கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தையும் இணைத்து, ஒரே நிர்வாகத்தில் கொண்டு வரும் திட்டம் அறநிலையத் துறையிடம் இல்லை.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இந்த இரு தேவஸ்தானங்களும் ஒரே நகரத்தில் அமைந்து இருப்பதால், இரு இடங்களிலும் எக்சிகியூட்டிவ் ஆபீசர் வைத்து நிர்வகிக்கப்படுகிறது. இரு நிர்வாகமும் அசிஸ்டெண்ட் கமிஷனர் அளவில் வந்தால் இன்னும் செம்மையாகவும், நல்ல முறையிலும் நடைபெறும் என்பதற்காக அசிஸ்டெண்ட் கமிஷனர் நிர்வாகத்தின்கீழ் ஒருங்கிணைத்துச் செய்வதற்கு அரசு முன் வருமா என்பது தான் என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்களின் பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே ஏறத்தாழ 20 கோயில்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. 20 கோயில்களையும் இணைத்து ஒரே செயல் அலுவலருடைய நிர்வாகத்தில் கொண்டு வருவதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறோம். இங்கேயும் இரண்டு கோயில்களும் பெரிய கோயில்கள். விருத்தகிரீஸ்வரர் கோயிலுக்கு ஏறத்தாழ நான்கு லட்சம் ரூபாய் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு இருந்தாலும் கூட, நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்களுக்கு நன்றாக தெரியும் — திட்டங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் அளவிற்கு அந்த கோயில் வருவாயை உயர்த்த முடியும். அதற்கே தனியாக அசிஸ்டெண்ட் கமிஷனர் ஒருவரை இன்னும் ஒரு ஆண்டு காலத்திலே நியமிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தனித் தனியாக இருந்தால் இன்னும் நன்றாக இந்த இரண்டு கோயில்களும் வளர்ச்சி பெறமுடியும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் இருக்கிற அந்த விருத்தகிரீஸ்வரர் கோயிலில் அல்லது கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தில் — அதனை அசிஸ்டெண்ட் கமிஷனர் நிலைக்கு உயர்த்தினால் நிர்வாகம் செம்மையாக, சீராக நடைபெறும். அங்கே திருப்பணி வேலைகள் எல்லாம் நடைபெறாமல் இருப்பதால், ஒரு நல்ல உயர்தர அதிகாரியை அமர்த்தினால விரைவில் இந்தத் திருப்பணி வேலைகளை எல்லாம் முடிப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கும். அதை உணர்ந்து விரைவில் இதை நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மொளஞ்சியப்பர் கோயிலைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற நிர்வாக அதிகாரி சில குறைபாடுகளோடு இருக்கிறார் என்பது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நிர்வாக அதிகாரியை மாற்றி, அந்தப் பணிகள், திருப்பணிகள் வேகப்படுத்தப்படும். அதேபோல் விருத்தகிரீஸ்வரர் கோயிலுக்கும் திட்டங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். எனவே ஒரு அங்காடியை பலமாடிக் கட்டிடத்தைக்கட்டி அதன்மூலம் அந்தக் கோயிலின் வருமானத்தைப் பெருக்க இருக்கிறோம். திருப்பணிக் குழு போடப்பட இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு கோயில்களுடைய வளர்ச்சியை மனதிலே கொண்டு, காரியங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

9-35 மணி

அங்காடிகள் அமைத்தல்

*** 2232 திரு. சோ. பால்ராஜ் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாநகருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நகரின் மையப் பகுதியில் சிறு வியாபாரிகளுக்கான நிரந்தர அங்காடிகள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத்தலைவர் அவர்களே,

மதுரை நகரின் மையப் பகுதியிலே இருக்கிற கூடலழகர் கோவிலுக்குச் சொந்தமான திருக்குளத்தில் டெல்லியிலே இருப்பதைப் போல ஒரு ஏர்கண்டிசன் அங்காடி அமைப்பதற்கு அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் திட்டமிடப்பட்டது. அந்தக் கோவிலைச் சேர்ந்த வைணவர்கள், வைணவ ஆன்மீக நேயர்கள் ஒரு சங்கத்தின் மூலமாக நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கிவிட்டதன் காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. சோ. பால்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரின் முக்கியப் பகுதியாக உள்ள டவுன் ஹால் ரோடில் உள்ள பெருமாள் கோவிலில் உள்ள குளத்தில் இப்போது தண்ணீரும் கிடையாது. விழாவும் நடைபெறுவதில்லை. ஆகவே தடை வாங்கப்பட்டதை நீக்கி, அந்த அங்காடிகள் கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.